25th February 1969] [திரு. ஓ. பி. இராமன்]

இருப்பினும் உரிய தரங்களுக்கு ஏற்ப ஆதாயமற்றவையெனத் தெரிந்த திட்டங்களினாலும் அல்லது மின் இணைப்பு பெற விண்ணப்பதாரர்கள் தயாராக இராத காரணத்தினாலும் ஒரு சில நேர்வுகளில் மின் இணைப்பு கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். குறிப்பிட்ட நேர்வுகளில் நீண்டகாலம் தாமதம் ஏற்பட்டிருப்பதாக வாரியத்தின் நாட்டத்திற்கு கொண்டு வரப்பட்டால் அது பற்றி வாரியம் ஆய்வு செய்து தேவையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

IV.—GOVERNMENT BILL.

THE MADRAS ESSENTIAL ARTICLES CONTROL AND REQUISITIONING (TEMPORARY POWERS) AMENDMENT BILL, 1969 (L.A. BILL NO. 3 OF 1969)

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, "தமிழக சட்டப் பேரவை நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு 1969-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா[a] (சட்டப் பேரவை மசோதா எண் 3/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

1949-ம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையா பொருள்கள் மீது கட்டுப்பாடு செய்தலும் கேட்டுப் பெறுதலும் குறித்த (தற்காலிக அதிகாரங்கள் பற்றிய) சட்டத்தின் செல்திறன் கால அளவு 1969 ஜனவரி 25-ம் நாளன்று முடிவடைந்தது. அதன் செல்திறன் கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு, அதாவது 1974 ஜனவரி 25-ம் நாள் முடிய நீட்டிப்பதே இம் மசோதாவின் நோக்கமாகும்.

போர் முயற்சிகள் சம்பந்தப்பட்ட உற்பத்தி காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கென மின் சக்தியைச் சேமித்து வைக்கும் நோக்கத்துடன், சென்ற உலகப் பெரும் போரின்போது இந்தியப் பாதுகாப்பு விதிகளின் கீழ் இந்திய அரசு, மின்சக்தி வழங்கல் மீது கட்டுப்பாடு ஆணைகள் முதன் முதலாக விதித்தது. போர் முடிந்த பிறகு, தமிழ்நாடு 1949-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் மீது கட்டுப்பாடு செய்தலும் கேட்டுப் பெறுதலும் குறித்த (தற்காலிக அதிகாரங்கள் பற்றிய) சட்டத்தின் கீழ் இம் மாநிலத்தில் மின்சக்தி சம்பந்தமாக கட்டுப்பாடு விதிக்கல், நிலைப்படுத்துதல், மேல்வரி விதித்தல் போன்ற ஆணைகள் தொடர்ந்து செயலில் இருந்தன. அச்சட்டத்தின் செல்திறன் கால அளவும் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது. தமிழ்நாடு மின் இணைப்பின் உற்பத்தித் திறன் இரண்டாவது திட்டத்தில் 256 மெகா வாட்டிலிருந்து 571 மெகா வாட்டாக உயர்ந்தது. நெய்வேலி மின்சக்தி உட்பட இப்போது அது 1,470 மெகா வாட்டாக உள்ளது. இனி அடிக்கடி மின்சார வெட்டு நிகழாதிருப்பதற்கு ஆவன செய்து வருகிறோம். கூடுதலான மின்சக்தி நிலையங்களைத் துவக்குவதன் மூலமும், மின் இணைப்பிற்குக்

a Printed as Appendix II on page 68

கிடைக்கும் அனல் மின்சார அளவிற்கும், நீர் மின்சார அளவிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் குறைப்பதன் மூலமும் மின்விசை உற்பத்தியைப் பெருக்குவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்கவே எண்ணூரில் 340 மெகாவாட் திறனுள்ள அனல் மின்சார நிலையம் ஒன்றையும், கல்பாக்கத்தில் 400 மெகாவாட் திறனுள்ள அணு மின்சார நிலையம் ஒன்றையும் நிறுவும் திட்டம் தற்போது செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

உச்ச உபயோக வேளையில் மின்சக்தி வழங்கல் மீது அவ்வப்போது தேவைப்படும் கட்டுப்பாடுகள் விதிக்கும் ஆணைகளும் மின்சக்தி வழங்கலுக்காக கட்டணங்கள் விதிக்கும் ஆணைகளும், தமிழ்நாடு 1949-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடுசெய்தலும் கேட்டுப் பெறுதலும் குறித்த (தற்காலிக அதிகாரங்கள் பற்றிய) சட்டத்தின் கீழ் தொடர்ந்து செயலில் இருந்து வருகின்றன. எனவே, இச்சட்டத்தின் செல்திறன் கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிப்பது அவசியமென்று அரசாங்கம் கருதுகின்றது. 1910-ம் ஆண்டு இந்திய மின்சாரச் சட்டத்தைத் திருத்துவதற்கான செயற்குறிப்புகளை விரிவாக பரிசீலனை செய்கிற வரையில் இச் சட்டத்தின் செல்திறன் கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க இந்திய அரசும் ஒப்புக் கொண்டுள்ளது.

MR. CHAIRMAN : The question is :

'That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969 (L.A. Bill No. 3 of 1969), as passed by the Assembly, be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 3, 2, and 1, the Long Title and the Enacting Formula were put and carried

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, "மேற்படி மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென்று" கேட்டுக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is :

'That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969 (L.A. Bill No. 3 of 1969), as passed by the Assembly, be passed.'

The motion was put and carried and the Bill was passed.

V.—DISCUSSION ON THE SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1968-69.

MR. CHAIRMAN : We will now take up the next item, namely, the discussion on the Second Supplementary Statement of Expenditure for 1968–69.